## களம் காணும் கழகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# ஈரோடு, கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று பிரச்சாரம்!

## மாபெரும் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார்!

**தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (மார்ச் 31ஆம் தேதி) திருவாரூரில் தொடங்கி பரப்புரை மேற்கொண்டார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஊரான திருவாரூரில் பரப்புரையை தொடங்கினார். தொடர்ந்து இன்று ஈரோடு, கோவையில் பரப்புரையை மேற்கொள்கிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**02.04.2026 (வியாழக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **ஈரோடு** **சித்தோடு** (பொதுக்கூட்டம்) | பவானிசாகர், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு கிழக்கு, பவானி |
| மாலை 5 மணி | **கோவை** **கொடிசியா மைதானம்** (பொதுக்கூட்டம்) | சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

# சிலிண்டர் தட்டுப்பாடு, போர்சூழலுக்குத் தயாராகாத ஒன்றிய அரசு!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. குற்றச்சாட்டு!



தூத்துக்குடி, ஏப். 2-
2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு பல்வேறு மாவட்டங்களில் தேர்தல் பரப்புரை செய்வதற்காக தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வருகைபுரிந்த தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதியை, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் சு.சுப்பிரமணியன், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ராமஜெயம் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் வரவேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி,: பொதுமக்கள் மிகப்பெரிய அளவில் பாதிக்கக்கூடிய அளவிற்கு நிறைய பேர் தங்கி இருக்கக்கூடிய இடங்கள், வேலைப் பார்க்ககூடியவர்கள் தங்கி இருக்கக்கூடிய இடங்கள், வணிக ரீதியிலான சிலிண்டர்கள் உபயோகப்படுத்தும் இடங்கள், இவை எல்லா இடத்திலும் சிலிண்டர் கிடைக்காமல் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால், அவர்கள் சிலிண்டரை வாங்கியும் எவ்வித லாபமும் அடைய முடியாமல், தங்களுடைய தொழிலை நடத்துவதற்கே கடினமான சூழ்நிலை உருவாகியுள்ளது; மேலும், சிலிண்டர் விலை ஏற்றமாக உள்ளது.

ஒன்றிய அரசாங்கம், அப்படி எதுவுமே நடக்கவில்லை நடக்கவில்லை என சொல்லிக்கொண்டே இருக்கின்றனர். இவற்றை கட்டுப்படுத்த மக்களுக்கு கிடைக்கூடிய அளவில் மக்கள் கஷ்டப்படாமல் இருக்கும் அளவில் எவ்வித நடவடிக்கையும் இல்லை. அவர்கள் போர்சூழலை கணக்கில் கொண்டு தயாரான சூழலை உருவாக்க வேண்டும் எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது என்று பேசினார்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.4.2026) கரூரில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஈரோடு செல்லும் வழியில், கழக மூத்த முன்னோடி ராஜு (எ) நெடுமாறன் நேற்று காலமானதையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மலர்த்தூவி மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி உள்ளார்.



திருவள்ளூர் நகரத்தில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி.எஸ்.சந்திரன், தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன், ஆதரவு திரட்டும் விதமாக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் தி.மு.க மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

## சென்னை தெற்கு மாவட்டம்

# கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் அறிக்கை!

சென்னை, ஏப். 02
கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப்படி, மாவட்டக் கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி, மாநில இளைஞரணித் துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் அவர்களின் வழிகாட்டுதலின்படி வருகிற சட்டமன்றத் தேர்தலில் விருகம்பாக்கம் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா அவர்களுக்கு வாக்கு சேகரிக்க 'களத்தில் இளைஞர் அணி' என்னும் முன்னெடுப்பில் இளைஞர் அணி நிர்வாகிகள் எவ்வாறெல்லாம் செயல்பட வேண்டும் என்பதனை ஆலோசிக்க இன்று (02.4.2026 வியாழக்கிழமை) இரவு 8 மணி அளவில் கலைஞர் நகர் பி.டி.ராஜன் சாலையில் அமைந்துள்ள தேர்தல் பணிமனையில் கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி வேட்பாளரும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு.ராசா எம்.சி., வட்டக் கழகச் செயலாளர்கள் பூக்கடை ஆர்.பழனிச்சாமி, இராஜ். செழியன், பி.கே.குமார், அ.கதிரேசன், கே. சதீஷ்கண்ணன், சோ. செந்தில்குமார், ஜம்பு.முருகன் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர் டி.அசோக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

இதில் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள், பாக அமைப்பாளர்கள் மற்றும் மன்ற இளைஞர்களின் நிர்வாகிகள் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்று பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.